2017 ஜூலை 13]

நிலை இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 197, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

197—

ஏற்றுமதி மையம்

***7091—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரையில் கைத்தறி நெசவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மதுரையில் கைத்தறி நெசவுப் பொருட்களுக்கான ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளார்கள். மதுரை மாவட்டத்திலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் உள்ளூர் சந்தையில் விற்பனையாகும் கைத்தறித் துணி இரகங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உதாரணத்திற்கு, சுங்கிடிச் சேலைகள், செயற்கை பட்டுச் சேலைகள், லுங்கிகள், கோடம்பாக்கம் சேலைகள், தேவேந்திரா சேலைகள், காட்டன் வேஷ்டிகள் இதுபோன்ற இரகங்கள் மட்டுமே மதுரை தெற்கு தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலுள்ள கைத்தறி சங்கங்களில் உற்பத்தியாகி வருகின்றன. இவையனைத்தும் உள்ளூர் விற்பனைக்கான பொருட்களாக இருக்கின்றன. எனவே, ஏற்றுமதி செய்வதற்கு ஒரு மையத்தை அங்கே அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கைத்தறி இரகங்களை சிறப்பாக விற்பதற்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம்மூலம் ஆன்லைன் வர்த்தகம், ஏற்றுமதி விற்பனையை

[2017 ஜூலை 13

எளிதாக்கி இருக்கிறது. ஏற்கெனவே உள்ள விற்பனை மையங்கள்மூலம் இதனைச் செயல்படுத்தும் வாய்ப்பு இருக்கிறது. தனியாக ஒரு ஏற்றுமதி மையம் அமைக்க வேண்டிய அவசியமும் இல்லை. எனினும், தேவைக்கேற்ப ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாராக உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கைத்தறி நெசவுத் தொழிலை தங்கள் வாழ்வின் ஜீவாதாரமாகக் கொண்டு அதிக அளவிலான மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களது வாழ்க்கை மேன்மை அடையும்வகையில், மதுரையில் ஒரு கைத்தறி நெசவு ஏற்றுமதி மையத்தை அமைப்பதில் அம்மாவின் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள Powertex திட்டம், மதுரை நெசவாளர்களின் நலன் கருதி அமல்படுத்தப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளூர் தேவைக்கான உற்பத்தி மட்டுமே மதுரை பகுதியில் இருக்கிற காரணத்தால், அங்கே ஏற்றுமதி மையம் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதையும், ஆன்லைன் வர்த்தகம் சிறப்பாகச் செயல்படுகிற காரணத்தால், ஏற்றுமதி மையத்தை ஆங்காங்கே உருவாக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்தேன். அவர் குறிப்பிட்ட Powertex திட்டத்தின்மூலம், சாதாரண விசைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டம், தொகுப்பு தொழிற்கூடத் திட்டம், நூல் வங்கித் திட்டம், பொது உபயோக மையம், விசைத்தறி நெசவாளர்களுக்கான பிரதம மந்திரி கடன் திட்டம், விசைத்தறிகளுக்கான சூரிய மின்சக்தித் திட்டம், உதவி மையம், தகவல் தொழில்நுட்பம், விழிப்புணர்வு, சந்தை அபிவிருத்தி மற்றும் விளம்பர சேவைகள்*

2017 ஜூலை 13]

மற்றும் tex venture capital fund *ஆகியவற்றிற்கு நிதி உதவி வழங்கப்படும். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 198, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

198—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***5118—திரு. வி. ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதி, மயிலாடுதுறை பெரியார் மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையின்படி, மயிலாடுதுறை அரசு மருத்துவமனைக்கு இந்த ஆண்டு, 28 கோடியே 70 இலட்சம் ரூபாய் சிறப்பு நிதியாக ஒதுக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்பார்க்கின்ற புதிய கட்டடங்கள் மற்றும் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டு